# சபை அமர்வின் இடையே திடீரென போராட்டத்தில் குதித்த சாணக்கியன்!



## வேடிக்கை பார்த்த பிள்ளையான்

இரா.சாணக்கியன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இன்று திடீரென முன்னெடுத்த போராட்டத்தால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

மட்டக்களப்பு, மயிலத்தமடு மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்களுக்கு நீதி வழங்கக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற த.கலையரசன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட எம்.பிக்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 19 வெள்ளிக்கிழமை 06.10.2023 கதிர் 87

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## கொழும்பில் பஸ் மீது மரம் முறிந்து விழுந்து ஐவர் பலி

### 12 பேர் படுகாயம்



இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீது பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் 5 பேர் பலியாகியுள்ளனர். அத்துடன் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி - டுப்ளிகேஷன் வீதியில் இன்று காலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த 17 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 5 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். 2 ➤




## முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி வேண்டி யாழ்ப்பாணத்தில் இன்றும் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் குரல் கொடுக்கும் வகையில் கவனவீர்ப்புப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவகத்தின் முன்பாக காலை 10 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

"இலங்கை அரசே சட்டவாட்சியைப் பாதுகாக்க நீதித்துறைச் சுதந்திரத்தை உடனடியாக உறுதி செய்க" என வலியுறுத்தி போராட்டக்காரர்கள் பதாகைகளை தாங்கி நின்றனர்.

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சட்டத்தரணிகள், மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் 2 ➤

## பஸ்ஸுடன் கென்டெய்னர் மோதியது கஜுகம விபத்தில் 22 பேர் படுகாயம்



இ.போ.ச. பஸ்ஸுடன் கென்டேனர் மோதி ஏற்பட்ட விபத்தில் பயணிகள் 22 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 5 மணியளவில் நிட்டம்புவ, கஜுகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறையில் இருந்து பயணித்த 2 ➤

## எம்.பி. பதவியை இழக்கின்றார் அமைச்சர் நஸீர் அஹமட்

### உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் நீக்கப்பட்டது சட்ட ரீதியானது என உயர் நீதிமன்றம் இன்று வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

இந்தத் தீர்ப்பை அடுத்து அமைச்சர் நஸீர் அஹமட், தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க நேரிடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கட்சியின் தீர்மானத்தை மீறி 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு வாக்களித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து நஸீர் அஹமட் நீக்கப்பட்டார்.

இந்த நீக்கலுக்கு எதிராக நஸீர் அஹமட் 2 ➤

## பாடசாலை பஸ் விபத்தில் 15 மாணவர்கள் படுகாயம்

பாடசாலை பஸ் ஒன்றும் இன்று காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பஸ்ஸும் இலங்கை போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான பஸ்ஸும் நேருக்கு நேர் மோதியுள்ளது. இதன்போது பாடசாலை பஸ்ஸில் பயணித்த 15 மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

குளியாப்பிட்டி, ஹெட்டிபொல - கரந்திப்பல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் காயமடைந்தவர்கள் குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## 100 மில்லி மீற்றருக்கும் அதிகமாக பலத்த மழை குறித்து எச்சரிக்கை

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், தென்மேற்கு பகுதியில் நிலவும் மழை நிலைமையை மேலும் வலுவடையும், எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல், சப்ரகமுவ, தெற்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் 2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பயங்கரவாத விசாரணைப் பிரிவின் அறிக்கை விலக்கிக்கொள்ளப்பட்டது

கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பல இடங்களை இலக்கு வைத்து தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் எனக் கூறி நேற்று முன்தினம் (4ஆம் திகதி) பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை நேற்று (5) விலக்கிக் கொள்ளப்பட்டது.

நீதிமன்றிலிருந்து சிறைச்சாலைப் பேருந்து மூலம் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சந்தேக நபர் ஒருவரினால் ஜன்னல் வழியே வெளியே வீசப்பட்ட காகிதத் துண்டிலிருந்த விபரங்களின் அடிப்படையிலேயே குறித்த குண்டுத் தாக்குதல்கள் நடைபெறலாம், என பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவ்வாறான தொடர் தாக்குதல்கள் நடைபெறுவதற்கான உறுதியான ஆதாரங்கள் எவையும் கிடைக்கவில்லை எனவும் எனவே, முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை விலக்கிக் கொள்வதற்கு அனுமதி வழங்குமாறும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நீதிமன்றத்திடம் கோரப்பட்டது.

அதற்கமைய மேற்படி கோரிக்கைக்கு கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன நேற்று அனுமதி வழங்கினார். (ரெ-09)

## மத நம்பிக்கை அவமதிப்பு பிரபல ஜோதிடர் கைது

பிரபல ஜோதிடர் இந்திக்க தொட்டவத்த கைது செய்யப்பட்டுள்ளார்.

மத நம்பிக்கைகளை அவமதித்ததற்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் கணினி குற்றத் தடுப்பு விசாரணை பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கார் மோதி இறந்த பொலிஸ் அதிகாரிக்கு பதவி உயர்வு

போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த போது கார் மோதி உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு தற்போது பொலிஸ் சார்ஜனாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு, குருந்துவத்தை சுற்று வட்டத்திற்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் வலஸ்முல்ல பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடையவராவார்.

விபத்து தொடர்பில் காரை செலுத்தி தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில்நுட்ப பொறியாளராக பணிபுரியும் நாரஹேன்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (04)

## 100 மில்லி மீற்றருக்கும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (04)

## பஸ்ஸுடன் கென்டெய்னர் மோதியது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்ஸே இவ் வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த 22 பேரும் வத்துபிட்டி வல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்கிட மாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது. (அ)

## எம்.பி. பதவியை இழக்கின்றார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். குறித்த வழக்கின் தீர்ப்பு இன்று அறிவிக்கப்பட்டது.

இதன்போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பரால் அக்கட்சியில் இருந்து சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் நீக்கப்பட்டது சட்ட ரீதியானது என உயர் நீதிமன்றம் அறிவித்தது.

இந்த வழக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாகப் பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ள நிலையில், அதற்கு அரசு நடவடிக்கை எடுக்காமையைக் கண்டித்து போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (01, அ)

## கொழும்பில் பஸ் மீது மரம் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இருந்து தெனியாய நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ் மீதே இவ்வாறு மரம் முறிந்து வீழ்ந்தது.

பஸ்ஸில் சிக்கியவர்களை மீட்கும் முயற்சியில் பொலிஸாரும், விமானப் படையினரும் ஈடுபட்டனர். இந்த அனர்த்தத்தால் அந்தப் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இந்த நிலையில், 100 வருடங்கள் பழமை வாய்ந்த ரொபரோஸியா வகையான மரம் ஒன்றே பேருந்தில் முறிந்து வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ரானி ஜயவர்தன இதனைத் தெரிவித்தார்.

எனினும், இந்த மரத்தை அகற்ற வேண்டும் என முன்னதாக எந்தவொரு கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்

இந்த வகை மரங்கள் மேலும் சில பகுதிகளில் உள்ளன. குறித்த மரங்களின் தன்மை தொடர்பில் ஆராய்ந்து, அவற்றினை அகற்றுவது தொடர்பிபாக எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ, 04)

## சபை அமர்வின் இடையே திடீரென ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 க்கு குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளைத் தொடந்து, சபையில் விசேட கூற்றை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. இராசமாணிக்கம் சாணக்கியன், மயிலத்தமடு – மாதவனைப் பகுதியில் பண்ணையாளர்கள் முன்னெடுக்கும் போராட்டம் தொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்து, “எமது நிலம் எமக்கு வேண்டும்“, “எமது வளம் எமக்கு வேண்டும்“, “மகாவலி அதிகார சபை கெடுபிடிகளை நிறுத்து“ என்று கோஷங்களை எழுப்பியும் பதாகையை ஏந்தியவாறு சபைக்கு நடுவே சென்றார்.

இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய எம்.பிக்களும் அவ்விடத்துக்கு வந்ததுடன் கைகளில் ”மயிலத்தமடு மக்களுக்கு வேண்டும்”, ”மகாவலி ஆக்கிரமிப்பை நிறுத்து” என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சபாபீடத்துக்கு முன்னால் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதன்போது சபைக்குத் தலைமை தாங்கிய நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், ”உங்கள் பிரச்சினையைச் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கின்றோம். சபையின் தினப் பணிகளுக்கு இடமளியுங்கள்” – என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தார்.

எனினும், அவர்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில், சபை முதல்வரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ”விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சபையில் இல்லை. அது தொடர்பில் அமைச்சருடன் கலந்துரையாடலாம்” – என்று கூறினார். இதன்போது சபை முதல்வருடன் சாணக்கியன் எம்.பி. வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இவ்வேளையில் ஆளும் கட்சி உறுப்பினர் பிரேமநாத் சீ தொலவத்த, சாணக்கியன் எம்.பியை நோக்கி ”பேசாமல் போய் அமருங்கள்” என்று கூச்சலிட்டார். அவரை நோக்கிப் பதிலளித்த சாணக்கியன் எம்.பி., ”நாங்கள் எங்கள் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் போராடுகின்றோம். தேவையில்லாத விடயத்தில் நீங்கள் தலையிடாது உங்களின் வேலையைப் பாருங்கள்” என்று கூறினார். இதன்போது சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இதேவேளை, இராஜாங்க அமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் சபையில் இருந்ததுடன், அவர் நடப்பவற்றை நின்றபடி பார்த்துக்கொண்டிருந்தார்.

அத்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்.பி. வீ. இராதகிருஷ்ணனும் சபை நடுவே சென்று சிறிது நேரம் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் நின்றுவிட்டு பின்னர் தனது ஆசனத்துக்குச் சென்று அமர்ந்துகொண்டார்.

கூட்டமைப்பு எம்.பிக்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில், சபையின் தினப் பணிகளுக்கு இடையூறு செய்ய வேண்டாம் என்றும், ஆசனங்களில் சென்று அமருமாறும் சபைக்கு தலைமை தாங்கிய நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் அடிக்கடி வலியுறுத்திய நிலையில், சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ”மயிலத்தமடு மேய்ச்சல் தரை பண்ணையாளர்களின் பிரச்சினையைச் சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தெரிவித்து தீர்வைப் பெற்றுத் தருவோம்” – என்று உறுதியளித்ததைத் தொடர்ந்து, அவர்கள் ஆர்ப்பாட்டத்தை முடித்துக்கொண்டு தமது ஆசனங்களில் சென்று அமர்ந்தனர். (அ)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற ஆசிரியர் தினம் கலாசாலை தாயே என்ற இசைப்பேழையும் வெளியீடு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஆசிரியர் தின விழா இன்று காலை கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் ஆசிரிய மாணவர் தலைவர் தசு.தனசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவனும் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரும் இசை அமைப்பாளருமாகிய ஜேம்ஸ் ஆன்ரன் லூர் ஜினோவால் கலாசாலைத் தாயே என்ற இறுவெட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன் காணொளி வடிவத்தை பிரதம விருந்தினர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை திறன் பலகையின் ஊடாக வெளியிட்டு வைத்தார்.

தொடர்ந்து, இசை அமைப்பாளருக்கான கௌரவம் மற்றும் பிரதம விருந்தினருக்கான கௌரவம் என்பன




இடம்பெற்றன.

இந்நிகழ்வில், ஆசிரிய மாணவர்கள் தமது அதிபர் மற்றும் விரிவுரையாளர்களைக் கலாசாலை ஆலயத்திலிருந்து மாலை சூட்டி பாண்ட் அணி வகுப்பு மரியாதையுடன் ஊர்வலமாக அழைத்து வந்ததுடன் நினைவுச் சின்னங்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (01)

## கல்முனை கார்மேல் பற்றிமாவில் மீலாத் விழா

(காரைதீவுச் செய்தியாளர்)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் தேசிய மீலாத் விழா கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் நடை பெற்றது .

நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர் கலந்துகொண்டார்.

சிறப்பதிதிகளாக கல்முனை வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி வரணியா, திருமதி றியாசா, உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் - பொறியியலாளர் எஸ்.ஹதிசன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

கல்லூரியின் மீலாத் விழாக் குழுத் தலைவர் ஏ.



ஆதம்பாவா வரவேற்புரை நிகழ்த்த, பிரதம பேச்சாளர் மௌலவி பஸில் எம்.பதுறுரதீன் சிறப்புரையாற்றினார். நிகழ்வில், மீலாத் விழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகள் வழங்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் மேடை ஏறின.



## ஒலுவில் அல் - மதீனா வித்தியாலய ஆசிரியர் தின விழா இன்று



(கே.எ.ஹமீட்)

ஒலுவில் அல் - மதீனா வித்தியாலய ஆசிரியர் தின விழா இன்று நடைபெற்றது.

இவ்விழாவில் தென்கிழக்கு பல்கலைக் கழக பேராசிரியர் எஸ்.எம். ஐயூப் பிரதம அதிதியாகவும் வலயக் கல்விப் பணிமனைப் பாடசாலை அபிவிருத்தி இணைப்பாளர் யு.எல். இஸ்திக்கீன் சிறப்பதிதியாகவும் கலந்து கொண்டிருந்தனர்.

ஒலுவில் அல் மதீனா வித்தியாலய அதிபர், ஆசிரிய ஆசிரியைகளைப் பாடசாலையின் மாணவர்களும் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் வாழ்த்தி ஊர்வலமாக அழைத்துச் சென்று கௌரவித்தனர்.

## கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பு சுவிஸ் தூதரக அதிகாரிகள் சந்திப்பு

(எம்.எப்.நவாஸ்)

கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பு மற்றும் சுவிஸ் தூதரக அதிகாரிகளுக்கிடையிலான களந்துரையாடல் நேற்று சுவிஸ் தூதரகத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பின்போது தற்போதைய நாட்டு அரசியல் நிலைவரம் மற்றும் எதிர்வரக்கூடிய தேர்தல்களின்போது கபே அமைப்பின் கண்காணிப்புத் திட்டங்கள் தொடர்பாக களந்துரையாடப்பட்டது.

கபே அமைப்பின் சார்பாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சுரங்கீ ஆரியவன்ச ஆகியோரும், சுவிஸ் தூதரகம் சார்பாக அதன் முதல் செயலாளர் ஜஸ்டின் பொலெட் மற்றும் அதன் அதிகாரிகளான கணிஷ்க ரத்ணப்பிரிய மற்றும் மெலீணா ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# சிக்கிம் வெள்ளத்தினால் உயிரிழப்பு 14 ஆக அதிகரிப்பு காணாமல் போயுள்ள 102 பேரைத் தேடும் பணி தீவிரம்



இந்தியாவின் வடகிழக்கில் இமய மலைத்தொடரில் அமைந்த சிக்கிமில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 14ஆக அதிகரித்துள்ளது. வெள்ளத்தில் காணாமல்போன 22 ராணுவ வீரர்கள் உள்பட 102 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வடக்கு சிக்கிமில் உள்ள லோனாக் ஏரிப் பகுதியில் புதன்கிழமை அதிகாலை மேக வெடிப்பால் அதீக கன மழை கொட்டித் தீர்த்தது. இதனால், தீஸ்தா ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வெள்ளத்தின் தாக்கத்தால், சுங்தாங் பகுதியில் உள்ள நீர்மின் திட்ட அணை உடைந்தது. இதன்காரணமாக, மங்கன், கேங்டாக், நாம்சி, பாக்யாங் ஆகிய 4 மாவட்டங்களில் பல்வேறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் பெருமளவு தண்ணீர் சூழ்ந்தது.

இந்த மாவட்டங்களில் 11 பாலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. 277 வீடுகள் இடிந்ததோடு, குடிநீர், கழிவுநீர் கட்டமைப்புகளும் முழுமையாகச் சேதமடைந்துள்ளன.

வெள்ளத்தால் சுங்தாங் நகரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 80 சதவீத பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளது. இந்தியாவின் இதர பகுதிகளுடன் சிக்கிமை இணைக்கும் முக்கிய சாலையான தேசிய நெடுஞ்சாலை-10 கடுமையாக சேதமடைந்துள்ளது.

மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையின்படி, பாக்யாங் மாவட்டத்தில் 7 பேர், மங்கன் மாவட்டத்தில் 4 பேர், கேங்டாக் மாவட்டத்தில் 3 பேர் உயிரிழந்துவிட்டனர். வெள்ளத்தில் சிக்கி காணாமல்போனவர்களின் எண்ணிக்கை 102 ஆக அதிகரித்துள்ளது. இதில் 22 பேர் இராணுவ வீரர்களாவர். சிங்டம் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தில், 23 இராணுவ வீரர்கள் காணாமல்போயினர். அவர்களில் ஒருவர் மட்டும் மீட்கப்பட்டார். மற்றவர்களைத் தேடும் பணி வியாழக்கிழமை இரண்டாவது நாளாக தொடர்ந்தது.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர், எல்லைச் சாலை அமைப்பினர் உள்ளிட்ட குழுக்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்வதில், மத்திய அரசுடன் முதல்வர் தமாங் தொடர்ந்து தொடர்பில் இருப்பதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக, முதல்வருடன் தொலைபேசியில் புதன்கிழமை பேசிய இந்தியப் பிரதமர் மோடி, மாநில அரசுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று உறுதியளித்திருந்தார். (04)

# பங்களாதேஷில் டெங்கு மரணங்கள் ஆயிரத்தைக் கடந்ததாக அறிவிப்பு

பங்களாதேஷில் வேகமாகப் பரவி வரும் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வெள்ளிக்கிழமை ஆயிரத்தைக் கடந்துள்ளது. இது குறித்து அந்த நாட்டின் சுகாதார சேவைகள் இயக்குநரகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில், இந்த ஆண்டில் மட்டும் டெங்கு பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இதுவரை இல்லாத வகையில் 1,030 ஐக் கடந்துள்ளதாகவும், இந்த நோயால் இதுவரை 2,10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும், டெங்குப் பாதிப்புக் குறித்து முழுமையாகப் பதிவு செய்யப்படதாதால், உண்மையான உயிரிழப்பு மற்றும் பாதிப்பு எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கும் என்று ஐ.நா.வின் சிறுவர் நல அமைப்பு தெரிவித்துள்ளது. (04)



# உக்ரைன் கிராமமொன்றில் ரஷ்யா தாக்குதல் பொதுமக்கள் 48 பேர் உயிரிழந்ததாக தெரிவிப்பு

உக்ரைனிலுள்ள கிராமமொன்றில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 48 பேர் உயிரிழந்ததாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து அந்த நாட்டு முப்படைகளின் தலைமை தளபதி அண்ட்ரி யேர்மக் வெளியிட்டுள்ள அறிக்கையில், கார்கிவ் பிராந்தியத்தைச் சேர்ந்த ஹ்ரோஸா என்ற கிராமத்தில் உணவகம் ஒன்றின் மீது ரஷ்யா எறிகணைத் தாக்குதல் நடத்தியது. செவ்வாய்க்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு (உள்ளூர் நேரம்) இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 48 பேர் உயிரிழந்தனர், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டாலும், அப்போது அந்த உணவகத்தில் ஏராளமானவர்கள் இருந்தனர். அந்த கிராமத்தில் அண்மையில் உயிரிழந்த ஒருவருக்கு நினைவஞ்சலி செலுத்துவதற்காக அங்கு அவர்கள் கூட்டமாகக் குழுமியிருந்தனர்.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் 6 வயது சிறுவனும் அடங்குவான். இது தவிர, தாக்குதலில் ஒரு சிறுவன் உள்பட ஏராளமானவர்கள் காயமடைந்துள்ளனர் என்றும் அதிகாரிகள் கூறினர்.

முன்னதாக, தெற்கு உக்ரைனைச் சேர்ந்த ஒடெஸா, மிகோலய்வ், கிரோவோரட் ஆகிய பிராந்தியங்களை நோக்கி ரஷ்யாவால் ஏவப்பட்ட 29 ஈரான் தயாரிப்பு ட்ரோன்களில் 24 ட்ரோன்களை இடைமறித்து அழித்ததாக உக்ரைன் விமானப் படை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து கிரோவோரட் பிராந்திய நிர்வாகத் தலைவர் அண்ட்ரி ரேகோவிச் கூறுகையில், உள்கட்டமைப்பு ஆலை ஒன்றில் ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் யாரும் காயமடையவில்லை என்றும் தெரிவித்தார்.

ஸ்பெயினின் கிரானாடா நகரில் நடைபெறும் ஐரோப்பிய அரசியல் சமூக அமைப்பின் மாநாட்டில் பங்கேற்பதற்காக அந்த நாட்டுக்கு உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி வியாழக்கிழமை சென்றார். அந்த நேரத்தில் ரஷ்யா இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.



உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததற்குப் பிறகு, ரஷ்யாவுக்கு எதிராக இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைந்தால், அது தங்களது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கூறி வருகிறது.

இருந்தாலும், நேட்டோவில் இணைய அதிபர் ஸெலென்ஸ்கி ஆர்வம் காட்டி வந்ததையடுத்து, உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்தது. இந்தப் போரில் உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிப் பிராந்தியங்களில் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியுள்ள ரஷ்யா, தங்களுடன் இணைத்துக் கொண்டதாக அறிவிக்கப்பட்ட லுஹான்ஸ்க், டொனட்ஸ்க், ஸபோரிஷியா, கொ்சான் ஆகிய பிராந்தியங்களில் உக்ரைன் வசமிருக்கும் எஞ்சிய பகுதிகளையும் கைப்பற்றும் முயற்சியில் உள்ளது.

உக்ரைனும் இழந்த பகுதிகளை மீட்பதற்காக உக் ரைன் எதிர்த் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனின் தாக்குதல் திறனைக் குறைப்பதற்காக அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் ரஷ்யா அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஏராளமான பொதுமக்களும் உயிரிழந்து வருகின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (04)

# டெக்ஸாஸ் எல்லைச் சுவர் எழுப்ப பைடன் அரசு அனுமதி அகதிகளின் வருகையைத் தடுக்க சட்டத்தடைகள் நீக்கம்

அமெரிக்காவின் தெற்கு டெக்ஸாஸ் எல்லையில் தடுப்புச் சுவர் அமைப்பதை அனுமதிக்கும் வகையில் 26 சட்டத் தடைகளை அந்த நாட்டு அரசு நீக்கியுள்ளது.

இது குறித்து அமெரிக்கத் தேசியப் பாதுகாப்புத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், டெக்ஸாஸ் மாகாணத்தின் ஸ்டார் மாவட்டத்தில் தடுப்புச் சுவர்களை எழுப்ப அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, அந்தப் பகுதியில் கட்டுமானங்களை எழுப்புவதற்குத் தடையாக உள்ள 26 சட்டங்கள் விலக்கிவைக்கப்படுகின்றன.

அந்தப் பகுதி எல்லை வழியாக அண்மைக் காலமாக சட்டவிரோதமாக அகதிகள் வருவது வெகுவாக அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லைச் சுவர் எழுப்புவதற்காக விலக்கப்பட்டுள்ள சட்டங்களில், சுத்தமான காற்றுப் பாதுகாப்புச் சட்டம், குடிநீர் பாதுகாப்புச் சட்டம், அழியும் நிலையிலுள்ள உயிரினங்கள் பாதுகாப்புச் சட்டம் ஆகியவை அடங்கும்.

முன்னதாக, அகதிகள் விவகாரத்தில் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டவராக அறியப்படும் டொனால்ட் ட்ரம்ப்பின் ஆட்சிக் காலத்தின்போது, டெக்ஸாஸ் மாகாணத்தின் தென்மேற்கு எல்லையில் 724 கிலோ மீற்றர் தொலைவுக்குத் தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டது. இதற்கு தற்போதைய ஆளும் ஜனநாயகக் கட்சியினர் பலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி ஜோ பைடன் பேசுகையில், தெற்கு டெக்ஸாஸ் எல்லைப் பகுதியில் மிகப் பெரிய சுவர் எழுப்புவது சரியான குடியேற்றக் கொள்கையாக இருக்காது என்றார்.

எனினும், அந்தப் பகுதியில் தடுப்புச் சுவர் அமைக்க அவரது அரசு தற்போது அனுமதித்துள்ளது, தனது பழைய கொள்கையிலிருந்து பைடன் விலகியுள்ளதைக் காட்டுவதாகக் கூறப்படுகிறது. இந்த நிதியாண்டில் மட்டும் தெற்கு டெக்ஸாஸ் எல்லை வழியாக இதுவரை சுமார் 245,000 அகதிகள் அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்துள்ளதாக அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இது மிகப் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதால், அந்த எல்லைப் பகுதியில் தடுப்புச் சுவர் அமைப்பதற்கான ஏற்பாடுகளை பைடன் அரசு தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. (04)

# யாழ்ப்பாண பிராந்திய சுகாதார பணிமனையினர் அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு கள விஜயம்






(சியாத்.எம்.இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார பணிமனைக்குட்பட்ட தெல்லிப்பளை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய மூன்று ஆதார வைத்தியசாலைகளின் கழிவு முகா மைத்துவத்தில் பணியாற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலைக் குழுவினர் நேற்று வியாழக்கிழமை களவிஜயம் மேற்கொண்டிருந்தனர்.

வைத்திய அத்தியட்சகர் டொக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர். றஜாப் மற்றும் பொறுப்பு வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர்கள் அவர்களை வரவேற்றனர்.

வைத்தியசாலை கழிவு முகாமைத்துவம் மற்றும் ஏனைய வைத்தியசாலைப் பிரிவுகளையும் வருகைதந்தோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இக்களவிஜயத்தில் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதாரப் பணிமனையின் சுற்றாடல் உணவுப் பாதுகாப்பு வைத் திய அதிகாரி டொக்டர். கமலராஜன், தெல்லிப்பழை வைத்திய அத்தியட்சகர் டொக்டர். எம்.எம்.றெமன்ஸ், ஊர்காவற்றுறை வைத்திய அத்தியட்சகர் டொக்டர். திசானி, பருத்தித்துறை வைத்தியசாலை பொறுப்பு அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் சார்பில் பொறுப்பு வைத்திய அதிகாரிகளான டொக்டர்கள்.எம்.எம்.தாஸிம், எஸ். அகிலன், எம்.எச்.எம்.சனூபர், மற்றும் தாதிய பரிபாலகர் பி.ரி.நௌபர், நிருவாக உத்தியோகத்தர் கே.விஜயகுமார், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இங்கு களவிஜயம் மேற்கொண்டோருக்கு கள விஜயத்தின் நினைவாக வைத்திய அத்தியட்சகர் ஞாபகச்சின்னம் வழங்கிவைத்தார்.

## மருதமுனையிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குகின்ற நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் "மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம்" எனும் நோக்குடன் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்ற நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல். முக்தார் அவர்களினால் முன்னெடுக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மருதமுனை மிமா விளையாட்டுக் கழகத்துடனான கலந்துரையாடல் பர்வின் ரெடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல் ஹாஜ் கலீல் முஸ்தபா அவர்களுடன் மருதமுனை ஆத்தியடி தோப்பில் இன்று இடம்பெற்றது.

இதன்போது, மருதமுனை மிமா விளையாட்டு கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன்,

மிமா விளையாட்டு கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மருதமுனை இளைஞர் கழகங்களுக்கு உதவுவோம் என்னும் உதவி திட்டத்திற்காக அல் ஹாஜ் கலில் முஸ்தபாவுக்கு மருதமுனை மிமா விளையாட்டு கழகத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.




## காரைதீவு விபுலானந்தா முன்பள்ளி சர்வதேச ஆசிரியர் தின விழா



(காரைதீவுச் செய்தியாளர்)

காரைதீவு விபுலானந்தா முன்பள்ளிப் பாடசாலையின் சர்வதேச ஆசிரியர் தின விழா இன்று பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது .

பிரதம அதிதியாக ஓய்வு நிலை அதிபர் கே.புண்ணியநேசன் கலந்து சிறப்பித்தார்.

முன்னதாக, பெற்றோர்களால் வழங்கப்பட்ட பாடசாலை பெயர்ப்பலகையை பிரதம அதிதி ஓய்வு நிலை அதிபர் கே.புண்ணியநேசன் திறந்து வைத்தார்.

சிறப்பு அதிதிகளாக ஆசிரியர்களான ஜெயநிலாந்தினி, ரம்யா, சனுஜா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பெற்றோர்கள் ஏற்பாடு செய்த இந்த நிகழ்ச்சி குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

# இராணுவ முகாம்களை அகற்ற வேண்டாம் கிளிநொச்சி மக்கள் அமைதிப் போராட்டம்



கிளிநொச்சி மாவட்டக் கிராமப்புறங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டாம் எனக் கூறி, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் முன்பாக அமைதி வழி ஆர்ப்பாட்டம் ஒன்றை அப்பகுதி மக்கள் மேற்கொண்டிருந்தனர்.

மாவட்டச் செயலகத்தின் ஊடாக வடமாகாண ஆளுநருக்கான மகஜர் ஒன்றை அவர்கள் மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பூநகரி வாடியடி மாதர் சங்கத் தலைவி கருத்து தெரிவிக்கும்போது, இராணுவ முகாம்களை அகற்றும் பட்சத்தில் களவுகள், கொள்ளைகள், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள், கஞ்சா, கசிப்பு விற்பனை போன்றன அதிகரிக்கும். வீதிகளில் பெண்கள் நடமாட முடியாத சூழ்நிலை காணப்படும்.

அதேபோன்று, பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர்ப் பற்றாக்குறையும் நிலவுகிறது. நீர் பெறும் வாய்ப்பு, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு உதவி போன்ற விடயங்கள் அத்தனையையும் இழக்கும் சூழ்நிலையும் ஏற்படும் என தெரிவித்தார். (02)

## மதுபான விருந்தில் வாய்த்தர்க்கம் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை!



மதுபான விருந்தின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து நபர் ஒருவர் மற்றுமொருவரைச் சுட்டுக் கொன்றுள்ளார்.

அம்பன்பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திம்பிரிய, அம்போகம பிரதேசத்தில் நேற்றிரவு இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 27 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மதுபான விருந்து நடந்த வீட்டின் உரிமையாளர், வீட்டின் முன் வசிப்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தனியார் மயமாக்கும் மறுசீரமைப்புத் திட்டத்தில் அரச வங்கிகள் அடங்காது! -மத்திய வங்கி ஆளுநர்



இலங்கை வங்கி, மக்கள் வங்கி உள்ளிட்ட அரச வங்கிகள் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கும் திட்டத்திற்குள் உள்ளடக்கப்படவில்லை என்பதைப் பொறுப்புடன் அறிவிப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நேற்று மத்திய வங்கித் தலைமையகத்தில் தெரிவித்தார்.

குறித்த வங்கிகள் நிதி அமைச்சின் கீழ் உள்ள அரச நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யும் வேலைத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நேற்று முன்தினம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற பொது வர்த்தக மறுசீரமைப்பு பிரிவின் ஊடக செயலமர்வின்போது, ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு ஹோல்டிங் நிறுவனத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ள 31 அரச வர்த்தக நிறுவனங்களுள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவை அடங்குவதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை மறுத்துரைக்கும் வகையிலேயே மத்திய வங்கியின் ஆளுநர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார். (ரெ-10)

## யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவியைக் காணவில்லை என முறைப்பாடு

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவியைக் காணவில்லை என மாணவியின் பெற்றோரினால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த மாணவியே இவ்வாறு காணாமல் போயுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவி, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அருகில் உள்ள மருத்துவ பீட மாணவர் விடுதியில் தங்கியிருந்து தனது கற்றல் நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் அவரது தொலைபேசி இயங்காத நிலையில், அவரைத் தேடி அநுராதபுரத்தில் இருந்து, யாழ்ப்பாணத்திற்குப் பெற்றோர் வந்துள்ளனர்.

விடுதியில் பெற்றோர் விசாரித்தபோது , மாணவி செவ்வாய்க்கிழமை விடுதியில் இருந்து வெளியேறிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து, பெற்றோரினால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (01)

## சித்திரப் போட்டியில் தேசிய மட்டத்திற்கு தெரிவு பாலமுனை அல் ஹிதாயா மாணவிக்கு கௌரவம்



(எம்.எப்.நவாஸ்)

பாலமுனை அல் ஹிதாயா வித்தியாலயத்தில் தரம் 12 இல் கற்கும் எப்.பாத்திமா இனாயா எனும் மாணவி அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான சித்திரப் போட்டியில் வெற்றி பெற்று, தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டதற்கான கௌரவமளிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் பி.முஹாஜிரின் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

மாணவி மற்றும் மாணவியின் பெற்றோருக்கு பாண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டு, மாணவர்கள் புடை சூழ வரவேற்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், மாணவியைத் தயார்படுத்திய சித்திரப் பாட ஆசிரியை ஐ.எப்.முனாசபா மற்றும் வழி நடாத்திய அதிபரும் வாழ்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

அகில இலங்கைச் சித்திரப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களில் இவரும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் மண்டூர் புயலினால் பாதிக்கப்பட்ட 40 மீனவர்களுக்கு கடல் தொழில் உபகரணங்கள்



மேசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டத்தில் மண்டூர் புயலினால் பாதிக்கப்பட்ட 40 மீனவர்களுக்கான 45,000 ரூபா பெறுமதியான கடல் தொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் மண்டூர் புயலினால் பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கு மொத்தம் 18 லட்சம் ரூபா செலவில், தலா 45,000 ரூபா பெறுமதியான கடல் தொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் முரளிதரன், மெசிடோ நிறுவனப் பணிப்பாளர் யாட்சன், மற்றும் மீனவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (02)

## முதியவரிடமிருந்து தங்க நகைகள் கொள்ளை வாகனத்தில் கடத்தியவர்களில் இருவர் கைது

பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முறகம்பம் பகுதியில் முதியவர் ஒருவர் வீதியால் நடந்து சென்ற பொழுது அவரிடம் வாகனத்தில் வந்து வழி விசாரித்தவர்கள், முதியவரையும் ஏற்றிச் செல்வதாகத் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தில் இருந்த இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணுமாக முதியவரை ஏற்றிச் சென்று, அவர் இறங்கும் பகுதி வந்துவிட்டது வாகனத்தை நிறுத்துமாறு கூறிய பொழுதும், வாகனத்தை நிறுத்தாது சற்றுத் தூரம் சென்று, அவரிடமிருந்த தங்கச் சங்கிலி, காப்பு, மோதிரம், தோடு என்பவற்றை அபகரித்துக் கொண்டு நடுவீதியில் இறக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகப் பூநகரிப் பொலிசாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய, புளியங்குளம் பொலிசார் வீதிச் சோதனையின் மூலம் வாகனத்தை மடக்கிப் பிடித்துள்ளனர்.

அத்துடன், வாகனத்தில் பயணித்த இரண்டு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முதியவர் குறிப்பிட்ட பெண் அவர்கள் பயணித்த காரில் காணப்படவில்லை எனவும், தைான இரண்டு சந்தேக நபர்களும் பூநகரி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். (02)

JRIDE
BEYOND THE ROAD

# ONLINE TAXI APP FROM JAFFNA



**ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.**

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

**உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.**

**இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!**




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



+94 21 222 8358

**JRIDE TAXI SERVICE**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk



# விழிப்புணர்வு கருத்தரங்கு

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் மதுசாரக் கட்டுப்பாட்டுக்கான பயனுள்ள கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கான வலுப்படுத்தல் – என்னும் தொனிப்பொருளில் கலந்துரையாடல் ஒன்று இன்று காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது

இக்கலந்துரையாடலில், யாழ் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம் மற்றும் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் சிரேஸ்ட நிகழ்ச்சித் திட்ட. அதிகாரி ஏ.சி.ரகீம், நிகழ்ச்சி திட்ட அதிகாரி எஸ்.நிதர்சனா, ஊடகவியலாளர்கள், யாழ் பல்கலைக்கழக ஊடகக் கற்கை நெறி மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (O1)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.10.2023இல் வெளியிடப்பெற்றது.